17.03.2026 OS.No.177/2021 PW3 Name :.லோகலிங்கம்

குறுக்கு விசாரணை

1. நான் பிறந்து வாழ்ந்தது தஞ்சாவூர் பக்கம் ஆகும். திம்மாம்பேட்டையில் உணவு கடை வைத்துள்ள பழனி என்பவருக்கு சகலை ஆகும். திருமணத்திற்கு பின் என் மாமியார் ஊரில் சென்று செட்டில் ஆகியுள்ளேன். 1990ல் எனக்கு திருமணம் ஆனது. சுமார் 36 ஆண்டுகள் ஆகிறது. 27 வயதில் எனக்கு திருமணம் ஆனது. சியாமளா சொல்லிதான் சாட்சியம் கூறவந்துள்ளேன். வாதிகளும் என் மனைவியும் ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் ஆனால் உறவினர் கிடையாது.
2. திம்மாம்பேட்டை பாட்டூரில் உள்ள வீட்டைதான் வாதிகளின் வீடு என கூறுகிறேன். வழக்கு சொத்து ஊருக்குள் தனியாக தள்ளி உள்ளது. வாதிகள் தரப்பு முப்பாட்டனாரை பற்றி எனக்கு தெரியாது. முப்பாட்டனார் சம்பாதித்த பணத்தை கொண்டு சொத்து வாங்கபட்டது என்று விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது. முப்பாட்டனார் எப்போது இறந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அவர்களுடைய வாரிசுகளின் விவரம் எனக்கு தெரியாது. சின்னப்பையின் வாரிசுகள் பற்றிய விவரம் தெரியாது.
3. தாவா சொத்திற்கான பாப்பம்மாள் பெயரில் உள்ள பட்டா எதையும் நான் பார்த்ததில்லை. எனக்கு தெரிந்து பாப்பம்மாளுக்கு ரவியும் 1ம் பிரதிவாதியும் வாரிசுகள். பாப்பம்மாள் திம்மாம்பேட்டை கூட்டுறவு

வங்கியில் கடன் வாங்கியது பற்றிய விவரம் எனக்கு தெரியாது. அந்த கடனை அவர் திருப்பி செலுத்திய விவரம் எனக்கு தெரியாது. ரவிக்கு ஏற்கனவே திருமணமாகி மனைவி இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

4. ரவி இறந்தபின் அவருடைய வாரிசுகளை சேர்ப்பதற்காக தாக்கல் செய்த மனுவில் எதிர்தர்ப்பினர் என்ன பதில் போட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்து காலியிடமாகும். காலியிடத்திற்கு வீட்டு வரி ரசீதும் குழாய் இணைப்பு ரசீதும் வராது என்ற விவரம் எனக்கு தெரியாது. 12.04.2013 தேதியிட்ட பத்திரத்தை நான் பார்த்தது இல்லை. அது பதிவானது தொடர்பான சங்கதிகள் எனக்கு தெரியாது. பாப்பம்மாள் இறந்தது பற்றி எனக்கு தெரியாது. அவர் தாவா சொத்திற்கு அருகில் உள்ள வீட்டில் வைத்து இறந்துள்ளார் என்றால் சரிதான். இறப்பிற்காக யார்யார் எவ்வளவு செலவு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது.
5. 16.06.2021ல் நடந்த சம்பவம் குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது. சொத்து தொடர்பாக ரவிக்கும் சம்பத்திற்கும் இடையிலான பிரச்சனையில் நான் சமாதானம் எதுவும் பேசவில்லை. 18.06.2021ல் திம்மாம்பேட்டை காவல்நிலையத்தில் கொடுக்கபட்ட புகார் தொடர்பான விவரம் எனக்கு தெரியும். ரவி, சம்பத் பெயரில் புகார் கொடுத்தார். அது ரவி சொல்லி தெரியும். 21.04.2013 தேதியிட்ட மற்றும் 15.07.2021 தேதியிட்ட பத்திரங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பதில் பற்றி தெரியாது. அது தொடர்பான விவரங்கள் முதன்மை சாட்சியத்தில் எவ்வாறு கூறபட்டுள்ளது என்பது

தெரியாது. வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 17/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.17 14:51:50 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.